2350 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விரைவில் நடத்தப்படும்!

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச.10

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (09.12.2024) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா(எ)முத்துராமலிங்கம், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் கே.அசோக்குமார், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.ஐயப்பன், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்லூர் கே.ராஜு ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

காதர்பாட்சா என்ற முத்துராமலிங்கம்: இராமநாதபுரம் மாவட்டம்,இராமேஸ்வரம், இராமநாதசுவாமிதிருக்கோயிலில் உள்ள 300 க்கும் மேற்பட்ட ஓலைச் சுவாடிகளை பாதுகாத்து நவீனப்படுத்த அரசு ஆவண செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : இந்த அரசு ஏற்பட்ட பிறகு, இராமேசுவரம், இராமநாத சுவாமி திருக்கோயிலில் பயன்பாட்டில் இல்லாமலிருந்த இரண்டு அறைகளிலிருந்து 308 ஓலைச்சுவடி கட்டுகளிலிருந்து சுமார் 25 ஆயிரத்து 543 ஓலைச்சுவடிகள் கண்டறியப்பட்டது. ஓலைச்சுவடிகளைபாதுகாத்திட 6கட்டங்களாகபணிகள் மேற் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில்இந்துசமயஅறநிலையத்துறை உயர்மட்ட ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்திஅதன்கூட்டத்தில் முதல்வர் தெரிவித்த ஆலோசனையின்படி 1,584 திருக்கோயில்களில் ஓலைச்சுவடிகள் இருப்பு குறித்து களஆய்வு செய்யப்பட்டு அதில்52திருக்கோயில்களில் சுருணைஓலைகள்,இலக்கிய ஓலைச்சுவடிகள், மருத்துவம்தொடர்பானகுறிப்புகள் பொருந்திய ஓலைச்சுவடிகள்,தங்கமுலாம்பூசப்பட்ட ஏடு, வெள்ளி மற்றும் ஐம்பொன் பட்டயங்கள் என சுமார் 1,78,00 -ற்கு மேற்பட்ட ஆவணங்களை கண்டறியப்பட்டு, அவற்றை பிரித்து ஆறு கட்டங்களாக ஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம். தமிழர்களின் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாரம்பரியத்தை பறைசாற்றிய கீழடியை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய நம் முதலமைச்சர் நிச்சயம் இந்த ஓலைச்சுவடிகளை பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றார் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கேளாமல் கொடுக்கின்ற அரசு, கேட்டதெல்லாம் கொடுக்கின்ற அரசு ஒன்று உண்டுஎன்றால்அதுஎங்கள் முதல்வர் தலைமையில் அமைந்திருக்கின்றதிராவிட மாடல் அரசு என்றால் அது மிகையாகாது. இராமநாதசுவாமி திருக்கோயிலில் 138 நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஏற்கனவே இருக்கின்ற 20 குடியிருப்பு களை முழுவதுமாக பழுதுநீக்கி தற்போது பயன்பாட்டில்இருக்கின்றது. கூடுதலாக 7 கோடி ரூபாய் செலவில் 18 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்குகின்ற நிலையில் உள்ளது. கூடுதலாக இன்னும் தேவை இருப்பதை அறிந்து 34 குடியிருப்புகள் சுமார் 14 கோடி ரூபாய் செலவில் கட்டுவற்குண்டான மதிப்பீடு தயார் செய்யும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இந்தஅரசுஏற்பட்டபின் 136.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில்அர்ச்சகர்கள்மற்றும் பணியாளர்களுக்கு 500 வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை ஏற்படுத்தி தமிழக முதல்வர் 2025 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் அதனை முடித்திட வேண்டும் என உத்தரவிட்டிருக்கின்றார். அர்ச்சகர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களின் நலத்தை பேணி காக்கின்ற அரசு இந்த அரசு என்பதற்கு இந்த திட்டம் ஒரு எடுத்துக்காட்டாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்புல்லாணி ஆதி ஜெகநாத பெருமாள் திருக்கோ யிலுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்டது உண்மை. இந்த கோயில் கடலின் அருகே உள்ளதால் அங்குள்ள மண்ணால் ஆன சிற்பங்கள் கடல் காற்றினால் சிதலமடைந்திருப்பது உண்மை. இதை துறையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தவுடன் 8 கோடியே 60 லட்ச ரூபாய் செலவில் அத்திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்வதற்கு மண்டல மற்றும் மாநிலவல்லுநர்குழுக்களால் அனுமதி வழங்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டநம்முன்னோர்கள் உருவாக்கி அந்த இத்தகைய திருக்கோயில்களை பாதுகாக்கவேண்டும்என்பதற்காகத்தான் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு அரசின் சார்பில் ரூ.300 கோடியை மானியமாக வழங்கிய அரசு தமிழ்நாடு முதல்வர் அரசு என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அந்த வகையில்இதுவரை 274 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரையில் 38 கோயில்கள் திருப்பணி முழுமையாக முடிவுற்றி ருக்கின்றது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக ஜக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ விலிருந்து கும்பகோணம், துக்காச்சி ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு அதன் தொன்மை மாறாமல் புதுப்பித்து பாதுகாத்தமைக்கு 2024 ஆம் ஆண்டிற்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை இந்த மன்றத்தில்பெருமையோடுதெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழக முதல்வர் அவர்களின் துரித நடவடிக்கைகளால் அரசு மானியம் 300 கோடி ரூபாயோடு, 126.62 கோடி ரூபாய் அளவிற்கு உபயதாரர் நிதி, திருக்கோயில் நிதி மற்றும் பொதுநலநிதி வழங்கப்பட்டுள்ளது.மன்னர்கள்காலத்து பொக்கிஷங்களையும் பாதுகாக்கின்ற மாமன்னனாக எங்கள் முதல்வர் திகழ்கின்றார் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

கே.அசோக்குமார்: கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட காவேரிபட்டினம் பேரூராட்சியில்அமைந்துள்ளஸ்ரீ அங்காள பரமேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்து கொடுக்குமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் குறிப்பிட்ட அந்ததிருக்கோயிலின்பக்கம் அவர் செல்லவில்லை என்று கருதுகிறேன். அந்த திருக்கோயிலுக்கு மூன்று திருப்பணிகள் 57 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.இன்னும்ஐந்துமாத காலத்தில் திருப்பணிகள், முடிவுற்றுகுடமுழுக்குநடத்தப்படும். சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் குடமுழுக்கு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.சதாசிவம்: மேட்டூர்சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோனூர் சென்றாயபெருமாள்கோயிலுக்குகுடமுழுக்கு செய்திட சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு தற்போது தயாராக இருக்கின்றது. எப்போது குடமுழுக்கு செய்வீர்கள்? என கேட்டுக் கொள்வதோடு மேட்டூரில் பாலதண்டாயுதபாணி கோயில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான 17 சென்ட் நிலத்தை அமைச்சர் அவர்களின் முயற்சியால் மீட்டிருக்கின்றார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி சென்றாயபெருமாள்கோவிலுக்குகுடமுழுக்கு செய்வார்களா என்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இதுவரையில் 2,350 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு இருக்கின்றது. 10,860 திருக்கோயில்களுக்கு மாநில வல்லுநர் குழுவால் இதுவரையில்திருப்பணிமேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் 2025ஆம் ஆண்டுக்குள் குறைந்த பட்சம்5,000திருக்கோயில்களுக்காவது குடமுழுக்கு நடத்திட வேண்டும் என உத்தரவிட்டிருக்கின்றார். அந்தவகையிலேஉறுப்பினர் கோரியஅந்ததிருக்கோயிலில் திருப்பணி கள் ஏதாவது தடைபட்டிருந்தால் அதை விரைவு ப்படுத்துவதற்கும் நிதி ஆதாரங்கள் தேவையென்றால் பொது நல நிதியிலிருந்து வழங்கி, திருக்கோயில் நிலத்தை மீட்டுக் கொடுத்து அவருக்கு மகிழ்ச்சிஏற்படுத்தினோமோ அதபோல அடுத்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கையும் நடத்திக் கொடுத்து மகிழ்ச்சிஏற்படுத்திதருவோம்.

பி.ஐயப்பன் : உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சாத்தூர்கிராமத்தில்அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற சுந்தரமகாலிங்கம்திருக்கோயில்மலைபாதையில்பாலங்கள்கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு ஒரு வருட காலத்திற்கும் மேலாகிறது. அந்த பணிகள் இன்னும் ஆரம்பிக்கவில்லை.அதிகாரிகளைதொடர்புகொள்ளும் பொழுது வனத்துறை அனுமதி பெற வேண்டும் என்று கூறுகின்றார்கள். எனவே அமைச்சர் வனத்துறை அமைச்சர் அவர்களுடன் பேசிஅனுமதிபெற்றுமக்கள் பயன்பாட்டுக்காக மக்கள் பக்தர்களின் நலனுக்காக உடனடியாக அந்த பாலத்தை கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : இந்திய வனத்துறை சட்டத்தின் படி ரிவர்வ் பாரஸ்ட் ஏரியாவில் நிரந்தர கட்டுமான பணிகளுக்கு வனத்துறை அனுமதி அளிக்கின்ற சூழல் மறுக்கப்படுகின்றது. இருந்தாலும் பரிவேஷ் மூலமாக உடனடியாக அனுமதி கேட்டு விண்ணப்பித்தால் அது குறித்து பரிசீலிப்பதாக வனத்துறையின் செயலாளராகஇருந்ததிருமதிசுப்ரியா சாகு ஏற்கனவே ஒரு கலந்தாய்வு கூட்டத்தின்போது தெரிவித்திருந்தார். அந்த கூட்டத்தில்இதுபோன்ற 18 பொருண்மைகளை குறித்து ஆலோசித்து அதற்குண்டான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு வருகின்றோம். வருகின்ற காலகட்டங்களில்சட்டசிக்கலை தீர்த்து நிச்சயமாக இந்த பணிகளை மேற்கொண்டு பக்தர்களுடைய இலகுவான தரிசனத்திற்கு இந்த அரசு துணை நிற்கும் என்பதனை அரசின் சார்பிலும் துறையின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்லூர் கே.ராஜூ : உலகப் பிரசித்தி பெற்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர்திருக்கோயில் எப்போதுகுடமுழுக்குநடத்தப்படும்? வீரவசந்தராயர் மண்டபம் எப்பொழுது புதுப்பிக்கப்படும்? அதே நேரத்தில் அதனுடைய துணை கோயிலான செல்லூர் பகுதியில் இருக்கின்ற ஆப்பனூர் நாதர் கோயில் குடமுழுக்கு தொடர்பாக அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே கோரிக்கை வைத்துள்ளேன். அந்த கோயிலுக்குளப்போதுகுடமுழுக்கு நடத்தப்படும் என்பதை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : வீர வசந்தராயர் மண்டபத்தில் 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்திற்கு பிறகு அப்போது இருந்த அரசால் நியமிக்கப்பட்ட குழு அந்த மூன்று ஆண்டுகளில் சில பணிகளை மேற்கொண்டு இருந்தாலும்,வீரவசந்தராய மண்டபத்திற்கு சுமார் 25 அடி நீளம் கொண்ட கற்தூண்கள் தேவைப்படுகின்றது. அதற்குண்டானகற்கள் ஒரே அளவில் கிடைப்பது சிரமமாக இருந்ததை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அந்த கற்களை எடுப்பதற்குண்டான அனுமதி தற்போது வழங்கப்பட்டிருக்கின்றது.

இப்பணிக்காக ஏற்கனவே டெண்டர் கோரப்பட்டு, அந்த பணிகளும் நடந்துவருகின்றன. வீரவசந்தராயர் மண்டபத்தை சீரமைக்கும் பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறையின் ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்திலும்தமிழகமுதல்வர் கவனத்திற்கு கொண்டு வந்து அவரும் இதனை தொடர்ந்து கண்காணித்து வருகின்றார். விரைவில் அதற்குண்டான பணிகள் போர்க்காலஅடிப்படையில் நடைபெறும். உறுப்பினர் கோரிய திருக்கோயில் குடமுழுக்குப் பணியும் வெகு விரைவில்மேற்கொள்ளப்படும்.

மீனாட்சி அம்மன் திருக்கோயிலை பொறுத்தளவில் சுமார்63திருப்பணிகள்அதாவது 40 பணிகள் உபயதாரர்களாலும், 23 திருப்பணிகள் திருக்கோயில் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணிகளை விரைந்து முடித்து அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்ற வகையில் நிச்சயமாககுடமுழுக்குநடத்தித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதிச் செயலாளர் எஸ். இந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பகுதிச் செயலாளர் து.காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா - இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில்

பல்லாவரத்தில் மாபெரும் இறகுப் பந்து போட்டி!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் போட்டிகளில் விளையாடி தொடக்கி வைத்தார்

பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ – எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ பங்கேற்பு

பல்லாவரம் டிச 9 -

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சிமண்டலம்2உட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி திமுகமற்றும்இளைஞர்அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 8-12-2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை பழைய பல்லாவரம் ராஜீவ் காந்திநகர் வேல்ஸ்பள்ளிஅருகில்உள்ளஇறகுபந்துதிடலில் மாபெரும் ஒரு நாள் தொடர் இறகு பந்து போட்டி பல்லாவரம்பகுதிகழகச்செயலாளர் மண்டலதலைவர்இ.ஜோசப் அண்ணாதுரைதலைமையில் நடை பெற்றது.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன்ஏற்பாட்டிலும் வரவேற்பு உரை நிகழ்த்த

ச.சிவக்குமார் இரா.சேகர் எஸ்.நெடுஞ்செழியன்ஜி.கருணாமூர்த்தி ஐ. கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காஞ்சிபுரம்வடக்குமாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு இறகு பந்து போட்டிகளை விளையாடி தொடங்கிவைத்தார்.

அப்பொழுது அவர்களுடன்விளையாட்டுவீரர்களும் மாவட்ட கழகதுணைச்செயலாளர் பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா எம்எல்ஏ ஆகியோர்களும் அடுத்தடுத்து விளையாடி போட்டிகளை தொடங்கி வைத்தனர்

மண்டலக்குழுத்தலைவர் ஜோசப்அண்ணாதுரை அவர்களும்இணைந்துவிளையாடினார் அதைத்தொடர்ந்து மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பல்லாவரம்சட்டமன்றஉறுப்பினர் இ.கருணாநிதி முதல் பரிசாக ரூபாய் 10,000 உதய நிதிகோப்பை ஆண்கள் அணி பெண்கள் அணிஎன இரண்டு அணிகளுக்கு வழங்கப்பட்டது .

இரண்டாவது பரிசாக ரூபாய் 5000 உதயநிதி கோப்பையும் ஆண்கள்அணிபெண்கள் அணி என இரண்டு அணிகளுக்கு வழங்கப்பட்டது போட்டியில் பங்கேற்றவர்களுக்குமடல்களும்பரிசுகளும் வழங்கப்பட்டன

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட் பம்மல் வடக்கு பகுதிகழக செயலாளர் த. ஜெயக்குமார் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் மாவட்ட பிரதிநிதிகள் க.ரமேஷ்,த.ராஜாராமன்,கே. தனசேகரன், மாவட்ட அணிகளைச் சேர்ந்த பா. ராஜா, ஜூலியன் அதிசயராஜ்,

எஸ். ஹரி மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி. கே. ஏ.சத்தியபிரபுதுணைஅமைப்பாளர்கள் கார்த்திக், சிவசுப்பிரமணியன்,கேபூபதி வி. என். சிலம்பரசன், எல். டில்லி பாபு, எம். இளவரசன், எம். பிரகாஷ், எல்.ஆர். சதீஷ் குமார், வட்டக் கழகச் செயலாளர் டி. எஸ். பிரான்சிஸ் பால், எம்.அந்தோணி, தே. இளங்கோவன், ஜே. வி. சந்திரசேகர், ஆர்.கே. நாகராஜ், ஆர். ராதாகிருஷ்ணன்,எம். சார்லஸ், ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள்

ஆவடி மாநகராட்சியில் ரூ. 7 கோடி மதிப்பீட்டில்

குப்பை அள்ளும் பணிக்காக 60 புதிய வாகனங்கள்!

அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் டிச 10;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி முழுவதும் குப்பை அல்லும் பணிக்காக 118 மின்சார வாகனங்கள்,78இலகுரகவாகனங்கள், 6 கனரக வாகனங்கள் உள்ளன. இந்நிலையில்ரூ.7கோடி மதிப்பில் 40 இலகுரக வாகனங்கள்மற்றும்20கனரகவாகனங்கள் புதிதாக பெறப்பட்டுள்ளது இதன் துவக்க விழா ஆவடி மாநகராட்சி அருகே புதிய ராணுவ சாலையில் நடைபெற்றது இதில் தமிழ்நாடுசிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை

அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு வாகனங்களை கொடியை அசைத்து துவக்கி வைத்து ஆவடி மாநகராட்சிக்கு அர்ப்பணித்தார். இதன் மூலம் ஆவடி மாநகராட்சியில் உள்ள 48 வார்டுகளிலும் கூடுதலான குப்பைகளை விரைவாகஅள்ளமுடியும்எனமாநகராட்சி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட காமராஜர்நகர்மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தூய்மை பணியாளர்களுக்கு சிறப்புமருத்துவமுகாம்நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர்ஆவடிசா.மு.நாசர் துவக்கிவைத்துதூய்மைபணியாளர்களுக்கு மருத்துவ காப்பீடு வழங்கினார் . இதில் பேசிய அமைச்சர் சாமு நாசர் அவர்கள், கொரோனா காலகட்டத்தில் தூய்மை பணியாளர்களின் பணி மகத்துவமானது .அவர்கள் ஓய்வின்றி வேலைசெய்துதங்கள்கடமை ஆற்றினர் என கூறினார். பின்னர் ஆவடி தொகுதிக்குட்பட்ட கங்கை தெரு, புதிய அண்ணாநகர், சுப்பிரமணி நகர் ,கணபதி அவென்யூ, விவேகானந்தாதெரு,காமராஜர் நகர் ஆகிய பகுதிகளில் புதியமின்மாற்றினைதுவங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சிமேயர்ஜி.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் கந்தசாமி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள்ஜி.ராஜேந்திரன், ஜோதிலட்சுமி நாராயணபிரசாத், அமுதா பேபிசேகர், வி.அம்மு, , பகுதிச் செயலாளர்கள்ஜி.நாராயணபிரசாத், பேபிசேகர்வட்டக்கழகசெயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஏற்றுமதி வழிமுறைகளும், சட்ட திட்டங்களும் குறித்த பயிற்சி!

சென்னை, டிச.10

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளையும், சட்டதிட்டங்ககளையும் குறித்த 3 நாட்கள் பயிற்சி வரும் 26.12.2024 முதல் 28.12.2024 தேதி வரை நடைபெற உள்ளது. பயிற்சி நடைபெறும் இடம்: மாவட்டத் தொழில் மையம், கரூர் மாவட்டம்.

இப்பயிற்சியில் ஏற்றுமதி சர்வதேசவர்த்தகத்தின்அடிப்படைகள்,சந்தையின்தேவை, இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை, கொள்முதலுக்கான வாய்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், வங்கிநடைமுறைகள்,அந்நிய செலாவனியின் மாற்று விகிதங்கள், உரிமம் நடைமுறை குறித்ததகவல்கள், ஏற்றுமதி-இறக்குமதிவிதிமுறைகள்மற்றும் ஆவணங்கள், போன்றவை பயிற்றுவிக்கப்படும்.

மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும்பற்றியும்விளக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சிபற்றியகூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலகவேலைநாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசிஎண்கள்கொடுக்கப்பட்டுள்ளது: 99943 22859 / 90806 09808

அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்: www.editn.in

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் வழங்கும் விழா நடைபெற்றது எஸ். இந்திரன் தலைமையிலும் வீ.முனுசாமி வரவேற்புயிலும் வே. இராசேந்திரன், பி.ஜோதிகுமார், எம்.சீனிவாசகுமார், எல். பேகம், டி.ஆர்.நரசிம்மன், எ. நசீர், அ.லோகேஷ்குமார், விஜி சிவகுமார், சீ.இளஞ்செழியன், கே.ரமேஷ்பாபு, வ.லோகநாதன், கே.டிவி.முருகன், கு.பிரபாகரன் முன்னிலையிலும் இதில் கழக கொள்கை பரப்புச் இணைச் செயலாளர், தமிழ்நாடு தோல்உற்பத்திதொழிலாளர்கள்நலவாரியதலைவர்நெல்லிக்குப்பம்எஸ்.புகழேந்தி, மாவட்டச்செயலாளர்–அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநகரகழகசெயலாளர்எஸ்.ஆர்.ராஜாஎம்.எல்.ஏ. கலந்துகொண்டுசிறப்புரையாற்றிநலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் கழக இளம் பேச்சாளர் கா.இராஜராஜேஸ்வரி, டி.காமராஜ் மற்றும் டி.ஆர்.கோபி, கி. வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ரமணிஅதிமூலம், வீ.கார்த்திக், ச.ராஜேஷ். இ.மனோகரன், இரா.விஜயகுமார், கோ. தேனுபுரி, இரா.செல்வகுமார் கி.முத்துமாறன், வே.சிவசுப்பிரமணி, எஸ்.கார்த்திக், மு.தினேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் சசிகலா கார்த்திக், ஆர்.தாமோதரன், லிங்கேஸ்வரி பாபு, செ.சுரேஷ் மற்றும் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தாம்பரம் மேற்கு பகுதி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் எம் கலைவாணன் நன்றி கூறினார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருமழிசை பேரூர் திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு பொதுகூட்டம் மற்றும் நலத்திட்டம் உதவிகள் வழங்கும் விழா மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாநில ஆதிதிராவிட நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ சிறப்புரையற்றி 1000 பெண்களுக்கு புடவை வழங்கினார் உடன் கழகச் பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, சாகுல் அமீது கான், மா.ராஜி, காயத்திரி ஸ்ரீதர், ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், தங்கம் முரளி, வி.எம்.நாகதாஸ், தி.கோ.செல்வம், அருள், மு.சுரேந்தர், கே.எஸ்.எழிலரசன், இளங்கோவன், க.கங்காதரன், எம்.சங்கர், டி.கே.வேலு, ஜெ.சண்முகம், பார்த்திபன், வி.சதீஷ், ரேவதி, சரண்யா, நாகராஜ், மோகன்ராஜ், கோபு, ராஜா, பிரதீப், தாமோதரன், அன்பு, தரணி பிரசாத், ஆனந்தராஜ், முரளி, கோகுல், முருகன், ரகு, குமரேசன், ஜான்மேத்யூ, எம்.பிரபாகரன், சீனிவாசன், தாமோதரன், கிருஷ்ணன், வி.சதீஷ், ஹரிகிருஷ்ணன், திருநாவுக்கரசு, பால முருகன், தென்னரசு, வெங்கடேசன், உள்பட பலர் உள்ளனர்